**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 214/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | குழந்தைவேலு | த-பெ /க.பெ. | ராமநாதன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 54/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மில்டரி (ஓய்வு) | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.04.2026**

---

**18.04.2026**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 30.07.2025-ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, திருமயம் கிளை **காசோலை (காசோலை எண் 487818) அசல் ம.சா.ஆ.1 ஆகும்.** கடந்த 31.07.2025-ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, திருமயம் கிளை **காசோலை (காசோலை எண் 487819) அசல் ம.சா.ஆ.2 ஆகும்.** கடந்த 31.07.2025-ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, திருமயம் கிளை **காசோலை (காசோலை எண் 487820) அசல் ம.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 31.07.2025 ம் தேதியில் ம.சா.ஆ.1 போதிய தொகை இல்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.4 ஆகும்.** கடந்த 01.08.2025 ம் தேதியில் ம.சா.ஆ.2 போதிய தொகை இல்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.5 ஆகும்.** கடந்த 01.08.2025 ம் தேதியில் ம.சா.ஆ.3 போதிய தொகை இல்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல்**

**ம.சா.ஆ.6 ஆகும்.** கடந்த 05.08.2025 ம் தேதியன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் ம.சா.ஆ.7 ஆகும்.** கடந்த 13.08.2025 ல் எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.8 ஆகும்.** கடந்த 18.08.2025 ல் எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய **பதில் வழக்குரைஞர் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.9 ஆகும்.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை - ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.18 18:22:23 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)